JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 56/2026 |
| | : | Prosecution P.W –3 |
| NAME | : | தமிழ்ச்செல்வி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 12.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த இரண்டாம் நிலை காவலர் சின்னதம்பி மற்றும் புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் அந்தோணிபால்ராஜ் ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நன்றாக தெரியும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.11.2025 ம் தேதி 01.30 மணிக்கு மேற்படி இரண்டாம் நிலைகாவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிரபாகரன் என்பவரது தாயார் கருப்பம்மாள் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 670/2025 பிஎன்எஸ் பிரிவுகள் 296(b), 118(1), 351(3) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின்

பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் வாக்குமூலம் அசாஆ 2 ஆகவும் மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 15.11.2025 ம் தேதி 02.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் கண்ணன் மற்றும் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து அரிவாள் ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி உள்ளார். மேற்படி அத்தாட்சி அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கருப்பம்மாள், பிரபாகரன், பரமசிவன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த இரண்டாம் நிலை காவலர் சின்னதம்பி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 15.11.2025 ம் தேதி 8.00 மணிக்கு தென்காசி அன்னியன் பாறைஅருகே வைத்து கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமலைக்குமார் என்பவரை விசாரித்து காயசான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பிஆர்எண் 34/2026 ஆக பெற்றுள்ளார். மேற்படி படிவம் 91 அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் சொத்தான அரிவாள் ஒன்று அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் பிஎன்எஸ் பிரிவுகள் 296(b), 118(1), 351(3) ன் கீழ் இறுதி அறிக்கை 30.11.2025 ல் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னாலும், நான் சொன்னபடி சொன்னதுபோல் எதிரிகள் கைதுசெய்யபடவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi